1970 ஆகஸ்ட் 28]

Now what is the position regarding the Supermarket in the City? Is it still being managed by T.U.C.S. and if so, what is its profit and loss account ?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, as I have already stated I have nothing on record at the moment to say anything about the writ petition. Regarding the Supsermarket and the functioning of the society, it is understood that their functioning is proper and in fact many of the Supermarkets are now running at a profit.

பழனியாண்டவர் கோயில் அறக்காவலர் குழு

* 109 வின.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

பழனியாண்டவர் கோவிலுக்கு அறங்காவலர் குழுவில் Trustee Board சட்டமன்ற உறுப்பினர் யாரேனும் இடம் பெற்றுள்ளனரா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இல்லை, ஆனல், பாராளு மன்ற உறுப்பினர் திரு. சி. டி. தண்டபாணி அவர்கள் கோவில் அறங்காவலர் குழுவில் ஒருவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, பழனியாண்டவர் கோவில் தமிழ்நாட்டிலேயே மிகவும் பிரபலமான கோவில்—திருப்பதிக்கு அடுத்தபடியாக இருக்கிறது. ஆகவே, இந்த மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஒவ்வொருவரை அந்தக் கோவில் நிர்வாகக் குழுவில் நியமித்தால் மாநிலம் முழுவதற்கும் பிரதிநிதித்துவம் இருக்கும். அப்படிச் செய்வார்களா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த கோவில்கள் தமிழ்நாட்டில் 300 இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்தையும் சேர்ந்த ஒவ்வொருவரைப் போடுவதால் சிரமம் ஏற்படும் என்றே அந்த அந்தப் பகுதி மக்களைக் கொண்டே போடப்படுகிறது.

விலைகள் ஏற்றம்

* 90 வின.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மத்திய சர்க்காரின் 1969–70-வது ஆண்டின் வரி உயர்வு அதிகரிப்பின் காரணமாக நமது ராஜ்யத்தில் எந்த அளவுக்கு விலைவாசி உயர்ந்துள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மத்திய வரி விதிப்பிற்கும், நமது மாநிலத்தில் விலைவாசிகளில் ஏற்பட்டுள்ள உயர்வுக்கும் உள்ள தொடர்பு எந்த அளவில் உள்ளது என்பதைச் சரியாகக் கணக்கிட்டுச் சொல்ல இயலவில்லை.